# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செங்கல்பட்டு</u>

**OS.No. 215/22** **தேதி: 13.02.2025**

வாதி தரப்பு சாட்சி – 1

**பெயர் : திரு. சக்கரபாணி**

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

என்ன பரிகாரத்திற்காக வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் பத்திரம் தவறாக எழுதப்பட்டதால் திருத்தம் கேட்டு போட்டிருக்கிறேன். பத்திரத்தில் எழுதப்பட்டதாக சொல்லும் சொத்து யாருடைய சொத்து என்றால் என்னுடைய சொத்து தான். யார் எல்லாம் சேர்ந்து அந்த பத்திரத்தை எழுதி கொடுத்தார்கள் என்றால் நான் மட்டும் தான் எழுதி கொடுத்தேன். அந்த ஆவணம் வாசாஆ 1 ஆகும். எப்போது வாசாஆ 1ல் பிரச்சனை உள்ளது என்று எனக்கு தெரியவந்தது என்றால் 2022 ல் தான் தெரியவந்தது. எப்படி எனக்கு தெரியவந்தது என்றால் 73 எண் பட்டா என் பெயரில் தான் தொடர்ந்து இருந்து வந்தது. அதனை எதிர் தரப்பு திடீர் என்று அவர்கள் பெயரில் மாற்றி கொண்டு எனக்கு நிலம் கிடையாது என்று சொன்னதால் வாசாஆ 1 ஆவணத்தின் நகலை பெற்று பார்க்கும் போது தான் தெரியவந்தது.

வாசாஆ 1 முழுவதையும் படித்து தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். வழக்கு சொத்தின் சர்வே எண் என்ன என்றால் 61/1 சி – 5.5 செண்ட் , 61/2 எ – 7.5 செண்ட் , 61/1 எ – கிணறு உட்பட 2 செண்ட் ஆகும். வழக்கு தற்போது நான் எந்த சர்வே எண்ணுக்கு போட்டிருக்கிறேன் என்றால் சர்வே எண் 61/1 சி – 4.5 செண்ட் எனக்கு சேர வேண்டும் என்று வழக்கு போட்டிருக்கிறேன். வாசாஆ 1 சொத்து விவரத்தில் முதல் அயிட்டத்தில் சர்வே எண் 61/1 சி – 10 செண்ட் என்று உள்ளது என்றால் சரிதான். வாசாஆ 1 பிரதிவாதிக்கு நான் எழுதிக்கொடுத்தது என்றால் சரிதான். அதனை எனது தாயார் அமராவதி மற்றும் நானும் சேர்ந்து தான் எழுதிக்கொடுத்தோம் என்றால் சரிதான்.

வாசாஆ 1 ல் அமராவதி கைநாட்டு இட்டதாக தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். வாசாஆ 1 ல் 1ம் நபர் கிரையம் பெற்று 2ம் நபர் பெயரில் பட்டா தாக்கலாகி வருகிறது என்று கண்டிருக்கிறது என்றால் சரிதான். 1ம் நபர் என்பது என்னுடைய தாயார் அமராவதி என்றால் சரிதான். 2ம் நபர் என்பது நான் என்றால் சரிதான்.

1வது அயிட்ட சொத்து வாசாஆ1 ல் இருப்பது இந்த வழக்கு சொத்து என்றால் சரிதான். வழக்கு சொத்தில் எனக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. எனது தாயார் அமராவதி தற்போது உயிருடன் இருக்கிறாரா என்றால் இல்லை. பிரதிவாதி ஜகதாம்பாள் எனக்கு என்ன உறவு முறை என்றால் என் உடன் பிறந்த அண்ணன் தெய்வசிகாமணியின் மனைவி ஆவார்.
(மேலும் கு.விக்காக ஒத்திவைக்கப்படுகிறது)